உ
சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டியைச்சேர்ந்த
உயர் திரு.கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்)
அவர்களின் சிவபதப் பேறு குறித்த
# நினைவஞ்சலி மலர்
25-10-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த
தென்துன்னைத் தோன்றலும் வீரசுந்தரமுதலி உயர்
சைவ வேளாண் மரபோனும் ஸ்ரீ பூதேஸ்வரச் சிவன்
தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தாவும் அகில
இலங்கை சமாதான நீதிவானும், ஓய்வு பெற்ற
நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தரும்மாகிய
உயர் திரு

# கனகசிங்கம் சிதானந்தம்

# (ஆனந்தம்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவஞ்சலி மலர்

# 25.10.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு-கனகசிங்கம் சதானந்தம்



மண்ணில்
23.12.1933

விண்ணில்
25.09.2007

## திதி

ஆண்டு சர்வசித்துப் புரட்டாதிப் பூர்வபக்கப்
பூண்ட திதி சதுர்த்தசியே பேசு- மாண்புடையான்
சதானந்தன் எனும் பேரோன், சீர் கயிலை நாதனுடன்
சதானந்தம் பெற்ற நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின்
ஒளி விளக்காய் உயிர்மூச்சாய்
உற்றாரும் மற்றோரும் உண்டு மகிழ
உவந்தளிக்கும் சேவைதனை ஏழு பத்துடன்
நான்கு ஆண்டுகள் சேரவே உவகையுடன்
செய்து வாழ்ந்து உயர்திரு பேறுவென
சிவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வம்
அவர்களின் ஆத்ம சாந்தி நினைவாக
இந்த ஓவிய மலரை
காணிக்கையாக்குகின்றோம்.




இங்ஙனம்
குடும்பத்தினர்
(மனைவி, பிள்ளைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச தோத்திரங்கள்



திருச்சிற்றம்பலம்

### *விநாயகர் துதி*

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவார்தம்கை

### *தேவாரம்*

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சோதியே சுடரே சூளொளிவிளக்கே
சுரிகுழற்பணை முலைமடந்தை
பாதியே பரனே பால் கொள் வெண்ணீற்றாய்
பங்கையத்தயனுமாலறியா
நீதியே செல்வத் திருப் பெருந்துறையி
னிறைமலர்க் குருந்தமேவியசீ
ராதியேயடியேனா தரித்தழைத்தா
ல தெந்துவே யென்றருளாயே

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நான் மறைநூல் சகலமுங்கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கள் தாயகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரன்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *திருப்புராணம்*

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
என்றும் மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க
- என்றார்.

### *திருப்புகழ்*

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
யுனை நானினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடைந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே.

### *வாழ்த்து*

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்

**தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாளர் கனகசிங்கம் சதானந்தம் [ஆனந்தம்] அவர்கள் வழிபடு தெய்வங்களை வழுத்தியதாக யாத்த துதிப்பாக்கள்.

### *குலதெய்வம் ஞான வைரவர் துதி*

உளக் கோயிலில் உனையிருத்தி உருகிகின்று
விளக் கேற்றி வழிபட்ட வேளைகளோ நீயறிவாய்
அழைக்கின்றான் யமன் என்னை ஐயா வைரவரே
பிணைக்கின்ற காலமில்லைப் பாவிக்கு நீயருளே.

செல்லரிபட்ட பொருளது போல வென் சிந்தை கெட்டு
புல்லறிவாலென் புந்தியும் மாழ்கிப் புலாலுடம்பைக்
கொல்லு மெமன் குறிவைக்குமுன் குளிர்பதமாம்
நல்ல பதமீந்திரு வைரவா நாளும் நான் வேண்டினனே.

எடுத்த இப்பிறப்பில் உனை யெண்ணாத நாளில்லை ஐயா
அடுத்த பிறப்புண்டேல் அப்போது முன்னை யனுதினமுங் கை
எடுத்து வணங்கும் வரமருள்வாய் வைரவ மூர்த்தியரே
படுத்த படுக்கையிலும் உன்னை அழைத்தேன் அருள்
- பாலிப்பாயே.

### *ஸ்ரீ பூதேஸ்வரர் சிவனைப்போற்றியது*

நித்தியமும் நெஞ்சிருத்தி நினைந்துருகி நின்றேனே பரசிவனே
பத்தியுடன் நாளும் பரிபாலனஞ் செய்து செய்து பதந்தொழுதேன்
பித்தா பிறைசூடி என்று பாடிய சுந்தரனுக்குன் பதங்
- கொடுத்தாயென்
சித்த மிசை குடி கொண்ட சிவனே பூதேஸ்வரரே புரியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தித்த கையும் வாழ்த்திய வாயும் வலம் வந்த கால்களுமோ
பந்தித்த பாவ் வினையாற் செயலிழந்து பாழ் பட்டதே
சிந்தித்து நான் நித்திரை செய்யும் வேளை சொர்ப்பணத்தில்
அந்திப்பிறையது காட்டிடவேண்டும் ஆலமுண்ட அரனே.

சித்தந் தெளிவிக்கும் திருமருந்துண்டு சிவன் பதியில்
நித்தஞ் சென்று நினைந்துருக நிமலன் பாத அருள் கிட்டும்
முத்தம் பொதிந்த முறுவலிப்பால் முன்வினை கடிந்தாட்
- கொள்ளும்
அத்தன் ஆனந்தன் அடித்தலங்கள் ஆனந்த மளித்திடுமே.

### *பிரத்தியங்கில காளி அம்பாள் துதி*

தஞ்சமென நான் நினைத்துத்தாழ்பணிந்து திருநீறுமிட்டேன்
வஞ்சமனத்தால் வழி தெரியால் செய்த பிழைகளுண்டு
- பொறுத்திடம்மா
பிஞ்சுமனம் கொண்ட பித்தனை பாவக்கடலிலே வீழ்ந்தாதே
அஞ்சலென் றெனை அணைத்திடம்மா அடைக்கலமே

காவல் தேவதை நீ காளி கனவும் நனவும் நீ காளி
ஆவல் கொடுப்பவள் நீ காளி அதையும் முடிப்பவள் நீகாளி
சோகக் கதைகள் எழுதாமல் சொர்க்கம் தலைவிதியாய் எழுதிவிடு
ஞானத் தாய் நீ மாகாளி நாடிவந்தேனுன் பதம் நாடி.

### *கரவெட்டி நுணுவிற் பிள்ளையார் துதி*

நம்பிக்கைக் யோடுன் பாதம் நான்
நாளும் நாளும் பணிந்தேத்தித்
தும்பிக்கையானே துணையிருப்பாய் என
துதித்துப் பாடி மகிழ்ந்தனனே
தம்பிக்கு வள்ளியைச் சேர்ப்பதற்கே
தனிவனத்தில் அழைக்கநீயும்
தும்பிக்கையானை யென வந்தவா
தூய் மலரடியினை தந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றதுணை யொன்றுண்டேல் உனையல்லா லாருளரோ
நற்றவத்து ஞானிகளும் நாடரியநற்பொருளே நலஞ்செய்யும்
கற்றவரு மேத்துங் கரவையூர் நுணுவிற் பதி விநாயகரே
மற்றெவரே காப்பார் மாமுதலே இவ்வேழைக் கினியருளே

புன் மதியால் நின்னருளைப் போக்கடித்தேன் பல்காலும்
நன்மதியை நானிழங்கேன் நானிலத்தோர் நகையாட
என்னரசே! மன்னுயிற்கு கேற்றதுணை நியல்லாது
பின்னொருவ ருண்டோ சொல் பேதையேனைப் பேணுதற்கே.

## அத்துளு அம்பாள் துதி

பற்றைக்குள் நீயிருந்து அடியார் பற்றறுக்கும் அன்னையே
கற்கும்கல்வி கலைகளெல்லாம் கொடுத்தருள் கலைவாணி
நிற்கு நிகருண்டோ நானிலத்தில் ஒருதெய்வம் நாலேன்
எற்கு அருளாயோ அத்துளுப் பதியில் எழில் அணங்கே

அண்ட சரா சரங்கட்கு மன்னையாகி அருட் பாலுட்டி கற்
கண்டு என மொழிமங்கயர் ராடியிசை மாடி மகிழும்
- சவராத்திரிகள்
தொண்டுடன் விரதமும் இருந்து நோற்போர் கோடியம்மா நான்
தண்டுடன் நடக்கும் படி வைத்ததேன் தாயே யத்துளு
- அம்பிகையே

பங்குனித் திங்கள் கார்த்திகை என்று பத்தர் கூட்டம்
எங்கெங்கு இருந்துன் பதிவந்து பொங்கல் படையல் செய்வார்
இங்கே நவராத்திரிப்பூசையும் விரதமும் நெஞ்சை நெகிழவைக்கும்
எங்கே எனைக்கை விடுவாயோ காப்பாயோ கையேந்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *வல்லிபுர ஆழ்வார் துதி*

வாரத்தில் ஞாயிறு வந்தால் வருவேன் உன்பதிக்கு
ஈரத்தில் தலைநனைத்து உன்வாசல் வந்திடுவேன்
யாரத்தில் மனமிருந்தால் பலமுறை பதிவலம் வருவேன்
தூரத்தில் போய்விடும் என்துன் பமெல்லாம் துளசீதரா

வல்லிபுர ஆழ்வாரே எனை யாழ்வாரென்று வந்தடி பணிந்தேன்
தொல்லை தருந்துயர் நீக்கிக் காத்தருள வேறொரு
- தெய்வமில்லை
எல்லையிலா மணற்பரப்புத் தாண்டிக்கடற்றீற்ற மாடிவந்தேன்
நல்லதொரு பதந்தரவேணும் நாகணையிற் றுயிலும் நாரணனே.

நல்ல மருதம் நெய்தல் நிலஞ்சூழ் மணற்பரப்பில்
சொல்லரிய அவதாரா சோதிவடிவைத் தேடியவா
வல்லிபுர மணற்றிடலெல்லை மேவிய மாதவனே
கொல்லும் நோய் பிணி கொடுவினைகள் நாமமிட ஏகிடுமே.

### சிந்தனைக்குச் சில

**உன்னிடத்தில் வேலை பார்த்தவனின் வியர்வை உலர்வதற்கு முன் அவர் கூலியைக் கொடு**

**சாவில் பல ஒன்றாகும். வாழ்வில் ஒன்று பலவாகும்**

**சுகத்தைக் கண்டு மகிழாதே. அது துக்கத்தின் ஒரு வித அலங்காரம்**

**பிறருக்கு நன்மை செய்ய பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு**

**துன்பங்களை உன்னிடத்தில் குடிவைக்காதே. அது உன்னை இறுதியில் அழித்துவிடும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமான் திரு கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்) அவர்களின்

# வரலாற்றுரை

அமரர் அவர்கள் யாழ்ப்பாணம் வடமராட்சியில் சிவமணமும் தமிழ் மணமும் கமழப்பெறும் தென்துன்னையம் பதியில் வீரசுந்தர முதலி உயர் சைவ வேளாண் மரபில் திருவாளர் கனகசிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்டபுத்திரராக 1933.12.23 இல் இம்மண்ணுலகில் அவதரித்தார் தேம்பாமலர் செல்வராஜா யோகேஸ்வரன், சிவஞானம், அமுதேஸ்வரி ஆகியோர் இவரின் உடம்பிறப்புக்களாவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/துன்னாலை அ.த.க.பாடசாலையிலும் பின்னர் யா/சென்பற்றிக்ஸ் கல்லூரியில் தனது உயர் கல்வியை பயின்று நிறைவு செய்தார். அவர் தனது 22வது வயதில் நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தராக அரசசேவையில் தற்காலிகமாக இனைந்து கொண்டார். பின்னர் 27வது வயதில் நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தராக நிரந்தர அரசசேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டு பருத்தித்தறை யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை கிளிநொச்சி ஆகிய இடங்களில் கடமையாற்றி இறுதியாக வவுனியா மாவட்ட நீதிமன்றில் தனது 60 வது வயதில் ஓய்வுபெற்றார். தனது சேவைக்காலத்தில் சக ஊழியர்களாலும் மேலதிகாரிகளாலும் நன்மதிப்புப் பெற்ற உயர்ந்த பண்பாளன் நிறைபொறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் ஆடூஉகுணங்கள் நான்கும் ஒருங்கே அமையப் பெற்றவர்.

வரன்முறை வழாது திருவாளர் கந்தையா பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் புத்திரி சிவபாக்கியம் என்பவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிமணம் ஒம்பிவையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் இல்லறப்பயனால் எட்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். பிள்ளைகளை நன்றாகப் பாசத்தோடு வளர்த்து சிறப்பான முறையில் கல்விச் செல்வம் கிடைப்பதற்கும் நல்லநிலையில் அவர்களை வைப்பதற்கும் தன்னை பலவழிகளிலும் அர்ப்பணம் செய்து அரும்பாடுபட்டார்.

அந்நிய காலத்தில் ஸ்ரீ பூதேஸ்வரர் சிவாலயத்தின் ஆதீன தர்மகத்தாவாக விளங்கியதுடன் சிவ தொண்டே இவரின் தொண்டாக அமையப் பெற்றதுடன் இறக்கும் வரை பூதேஸ்வர நாதனுக்கு தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து வாழ்ந்தாரென்று சொல்வது மிகையாகாது.

அகில இலங்கை சமாதான நீதிவானாக இருந்து சமூகத்திற்கு அளப்பரிய சேவைதனை உவந்தளித்ததடன் அம்மக்களால் நன்மதிப்பையும் பாரட்டுதலையும் பெற்றார் நேர்மையாகவும் உண்மையாகவும் தான் மரணம் அடையும் போது கஷ்டம் இன்றி தன் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென நினைத்தார். அமரரின் வேண்டுகோளின்படி ஆண்டவன் அருள்புரிய 74வது வயதில் 25.09.2007 அன்று தீடீரென எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி சிவனடி சேர்ந்தார்.

**அன்னாரின் ஆன்மா சாந்தியடை வதாக**

**அன்பே சிவம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் மறைவால் துயருறும்

| | | |
|---|---|---|
| மனைவி | :- | சிவபாக்கியம் |
| பிள்ளைகள் | :- | சிவமலர், இராசமலர், சிவராஜா, ஆனந்தராஜா, யோகமலர், கிருபைராஜா, நித்தியானந்தன், கௌரி |
| மருமக்கள் | :- | விக்னராஜா, பவானி, சந்திரகலா |
| பேரப்பிள்ளைகள் | :- | அரவிந்தன், அஜந்தன், கோபிசங்கர், சிவசங்கர், கௌசி, தினேஷ், தனிஷிகா கிரீத்திகா, கஜானனன். |
| உடன்பிறப்புக்கள் | :- | தேம்பாமலர், செல்வராஜா, யோகேஸ்வரன், சிவஞானம், அமுதேஸ்வரி |
| மைத்துனர், மைத்துனிகள் | :- | இந்து சேகரம், ரவி மங்கையர்க்கரசி |

பெறாமக்கள் , மருமக்கள்

உடன்பிறவாத சகோதரர், சகோதரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் க.சதானந்தம் (ஆனந்தம்) அவர்களால் துன்னாலை ஸ்ரீபூதேஸ்வர சிவனை வேண்டிபாடிய திருவூஞ்சற்பாட்டு

**யாத்தோன் - க.கணபதிப்பிள்ளை**

## விநாயகவணக்கம்

பூங்கனி வல்லபைப் பொற்கரந் தொட்ட புழைக்கைமத
ஓங்கனி வாரணக் கற்பகன் என்றன் உளமலர்ந்தே
மாங்கனி நல்கிய தாதைதன் ஊஞ்சற் றமிழ்மலரத்
தேங்கனிச் செந்தமிழ் நல்குவன் சிந்தைத் திருக்கறுத்தே

பூ -அழகு, கனி -கன்னி, புழை - தொளை, ஓம்கனி - பிரணவமாகப் பழுத்த, தாதை - தந்தை, தேம் - இனிமை, திருக்கு - வஞ்சகம், வாரணம் - யானை

## நூல்

உலகுபுகழ் தென்துன்னைத் தச்சந் தோட்டத்(து)
உறுங்கோயிற் கற்பகநேர் பொழிலின் நீழல்
இலகுமணிப் பவளக்கால் மிசையே பூக்கும்
ஏறும்வயிர விட்டத்தே நிலவு தோயக்
குலிவுமணித் தரளவடம் இணைந்த ரத்ன
கோலமணிப் பீடத்தே வெ-ளரிக் கன்பாய்
வலமிருந்த நின்தோற்றம் பரிதி ஏய்ப்ப
வந்தருள்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்

கற்பகம் - தேவலோகத்துவிருட்சம், பொழில் - சோலை, இலகும் - பிரிகாசிக்கும் ஏறும் - வைரம், வயிரம் - வச்சிரமணி, நிலவு - ஒளி, தரளம் - முத்து, ரத்னகோலமணி - அழகிய மாணிக்கமணி, பரிதி - சூரியன், ஏய்ப்ப - ஒப்ப.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வந்தி வானமென விதானம் காட்டத்
திகழ்கொன்றைத் தார்மலர்கள் விண்மீன் காட்ட
அவ்வந்தி எழுமதியைக் கவிகை காட்ட
அலர்சுடரைச் சாமரைகள் மருங்கே காட்ட
கொவ்வையிதழ்க் குவிகொங்கைத் தேவ மாதர்
கொஞ்சுமிசைப் பாவிசைத்தே வடந்தொட் டாட்டத்
திவ்வியமாந் தென்துன்னைத் தச்சந் தோட்டத்
திருத்தலப்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்.

அந்தி - மாலைக்காலம், விதானம் - மேற்கட்டி, அதுகோயில் உறுப்புகளில் ஒன்று, தார் - மாலை, விண்மீன் - நட்சத்திரம், கவிகை - குடை, சுடர் - தீபம், சாமரை - கவரி, இதழ் - அதரம், கொங்கை - தனங்கள், வடம் - கயிறு, திவ்வியம் - தெய்வத்தன்மை.

கூனலிளம் பிறையாடக் கொன்றை யாடக்
கூவிளமும் வலம்புரியும் இணைந்தே யாடக்
கானமுறு புலியதளும் மறியும் ஆடக்
கவித்தபட விடநாகம் பணிந்தே யாடத்
தேனருவி யிசையுடுக்கை கரத்தே யாடத்
திகழ்கருணை விழிமூன்றும் மலர்ந்தே யாடப்
பானற்கண் கௌரியொடு தச்சந் தோட்டப்
பதியமர்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்.

கூவினம் - வில்வம், வலம்புரி - நந்தியாவர்த்தம், அதள் - தோல், மதி - பெண்மான், கவித்த - வளையப்பெற்ற பானல் - கருங்குவளை, கானம் - காடு

செஞ்சொலின மங்கையர்கள் இசைக்கும் பாடல்
செவிகுளிர மலர்கின்ற வீணைக் கீதம்
பிஞ்சுமொழிச் சம்பந்தப் பிள்ளை அப்பர்
பேசியநல் தமிழ்வேத முழக்கி னேடும்
நெஞ்சுருக்கும் வாசகத்தேன் சாம கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரல்படவே தந்தவெங்கள் நெஞ்சம் பூப்ப
மஞ்சுதவிழ் பொழில்புடைசூழ் தச்சந் தோட்டம்
மகிழ்ந்தமர்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்.

தமிழ்வேதம் -தேவாரம், வாசகம் - திருவாசகம், மஞ்சு - முகில்

தில்லையிலும் மதுரையிலும் குற்று லத்தும்
திருவாலங் காட்டினும்நெல் வேலிக் கண்ணும்
பல்லியத்தே பூத்தகொடு கொட்டி சாக்கை
பாண்டரங்க ஆடல்வகை கண்டோம் அல்லோம்
வல்வினையேம் களிகொள்ள அவைக்கீடாக
வடிவம்மை கௌரியொடு கோலங் காட்டிப்
பல்குபுகழ்த் தென்துன்னைத் தச்சந் தோட்டப்
பதியுரைபூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்.

தில்லையம்பலம், மதுரை, குற்றுலம், திருவாலங்காடு, நெல்வேலி என்பனசிவன் நடனம் செய்த பஞ்சசபைகள், கொடுகொட்டி, சாக்கை பாண்டரங்கம் என்பன இறைவன் ஆடிய கூத்துவகைகள் களி -மகிழ்ச்சி ஈடு-சமம், பல்குதல் - மிகுதல், இயம் - வாத்தியம்

புத்தமுதாய் அருட்டேனாய்ப் புவனம் பூத்த
புண்ணியமாய்ப் பரவெளியாய்ப் புனிதமான
சத்தியமாய்த் தாரகமாய்த் தொழும்பர்க் காய
சனாதனமாம்சற்குருவாய் நாத விந்தாய்
நித்தியமாய் நிருமலமாய் நீண்ட சோதி
நிகழுகின்ற திருவுருவாய் அருவாய் நின்றே
சித்தியெலாம் அருள்கின்ற தச்சந் தோட்டம்
திகழ்தருபூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்.

தாரகம் - பிரணவம், சனாதனம் - தொன்றுதொட்டுவருதல், நிருமலம் - மலமின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவரையை வில்லாக வளைத்த சோர்வும்
வன்றெண்டர்க் காத்தூது சென்ற சோர்வும்
நடந்துவைகைக் கரைக்குமண்ணைச் சேர்த்த சேர்வும்
நற்பாணற் காய்விறகு சுமந்த சோர்வும்
மடநல்லாட் காய்த்தாயாய்ச் சென்ற சோர்வும்
மறிந்தோட முகமலர்ந்து கௌரி யோடும்
தடம்பொழில்சூழ் தென்துன்னைத் தச்சந் தோட்டத்
தலத்துறைபூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்

வடவரை - மேருமலை, வன்தொண்டர் - சுந்தரர், பாணன் - பாணபத்திரர், மடநல்லாள் - திரிசிராப்பள்ளியில் வாழ்ந்த செட்டிச்சியம்மை, தடம் - குளம்

போதயன்றன் நெட்டெழுத்தும் நமனர் இட்ட
புல்லெழுத்தும் புனலெழுத்தாய்ப் புறத்தே பாய்
மாதவஞ்செய் தொழும்பருளப் போத கத்தும்
மாமதுரைக் கௌரியிட்ட தொட்டித் கண்ணும்
ஆதமிக ஆடினைமுன் அதுபோல் இன்றெம்
அகங்களிக்கக் கண்களிக்கக் கௌரி யோடும்
சீதரனார் தேவியுறை தச்சந் தோட்டத்
திருத்தலப்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்.

போது - தாமரைபூ, அயன் - பிரமா, நெட்டெழுத்து - நிண்டவாழ்நாள் எழுத்து நமன் - இயமன், புல்எழுத்து - அற்பமான மரண எழுத்து கௌரி - முன்னொரு காலத்தில் மதுரையில்வாழ்ந்த சிவநெறிப்பெண், ஆதம் - அன்பு, சீதரன் - திருமால், தேவி- அவர்சக்தியாகிய மகா இலப்புமி

மலைவல்லி கௌரிதனை இடத்தே கொண்டு
மனங்கலந்தே பொன்னூசல் ஆடத் தாயின்
அலைபெருகு பச்சொளியும் உன்நன் துப்பாம்
அருளொளியும் நீற்றொளியும் கலந்தே வண்ணக்
கலைபெருகு கோயிலிடம் கலப்ப எங்கள்
கடுவினையாம் இருளோடக் களிக்கின் றோம்யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுசீர்த் தென்துன்னைத் தச்சந் தோட்டம்
நின்றருள்பூ தேஸ்வரரே யாடீர் ஊஞ்சல்

மலைவல்லி - பார்ப்பதி, இடம் - இடப்பாகம், தாய் - கௌரியாகியதாய், துப்பு - பவளம்,

வித்தின்றி முளைத்தவரே ஆடீர் ஊஞ்சல்
வினைகடியும் மலைமருந்தீர் ஆடீர் ஊஞ்சல்
கத்துமறை வடிவத்தீர் ஆடீர் ஊஞ்சல்
கற்பமெலாம் கடந்தவரே ஆடீர் ஊஞ்சல்
அத்தவித மாயொளிர்வீர் ஆடீர் ஊஞ்சல்
அருட்கௌரி மனத்தடத்தீர் ஆடீர் ஊஞ்சல்
மத்தமலர்க் கொத்துடையீர் தச்சந் தோட்டம்
மலர்ந்தொளிர்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்

மலைவல்லி - பார்ப்பதி, இடம் - இடப்பாகம், தாய் - கௌரியாகியதாய், துப்பு - பவளம்.

வித்தின்றி முளைத்தவரே ஆடீர் ஊஞ்சல்
வினைகடியும் மலைமருந்தீர் ஆடீர் ஊஞ்சல்
கத்துமறை வடிவத்தீர் ஆடீர் ஊஞ்சல்
கற்பமெலாம் கடந்தவரே ஆடீர் ஊஞ்சல்
அத்துவித மாயொளிர்வீர் ஆடீர் ஊஞ்சல்
அருட்கௌரி மனத்தடத்தீர் ஆடீர் ஊஞ்சல்
மத்தமலர்க் கொத்துடையீர் தச்சந் தோட்டம்
மலர்ந்தொளிர்பூ தேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்

கத்துதல் - ஒலித்தல், கற்பம் - பிரமாவுக்குரிய ஆயுட்காலம், அத்துவிதம் - முத்திவகை, தடம் - குளம், மத்தம் - ஊமத்தை.

## வாழி

வான்மழையே அருள்மழையாய்ப் பொழிந்து வாழி
வள்ளுவன்தன் நீதியெலாம் மலர்ந்து வாழி
பான்மழையைப் பொழிபசுவே ஏரும் வாழி
பண்புநலம் அறம்யாவும் தழைத்து வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்மழையாம் தமிழ்க்கலைகள் பொலிந்து வாழி
செல்வளம் ஞானவளம் செழித்து வாழி
கான் மழையைப் பொழிகின்ற கொன்றை சூடும்
கண்ணுதற்பூ தேஸ்வரர்தம் கோயில் வாழி

## எச்சரிக்கை

திருமலரும் ஐந்துமுகத் தேவே எச்சரிக்கை
திங்கள்நதிச் செஞ்சடைப்பெம் மானே எச்சரிக்கை
உருத்திரனாய் அரியயனாய் உதித்தாய் எச்சரிக்கை
உலகமெலாம் புரந்துவருஞ் சோதீ எச்சரிக்கை
அருவமென உருவமென நிற்பாய் எச்சரிக்கை
ஆதியந்த மில்லாத அரனே எச்சரிக்கை
பொருவில்பூ தேஸ்வரரே புனிதா எச்சரிக்கை
பூங்கௌரி மனமலர்வாழ் மணாளா எச்சரிக்கை

## பராக்கு

அத்தனென நித்தனென ஆனாய் பராக்கு
அட்டதிக்கும் பத்திகொளும் அரசே பராக்கு
மத்தமலர்க் கொத்தலரும் முடியாய் பராக்கு
மால்விடைக்கே கால்பதிக்கும் ஆதீ பராக்கு
சத்தியமாய்ச் சிற்பரமாய்த் திகழ்வாய் பராக்கு
தளிர்கௌரிக் கைக்குவளை யிட்டாய் பராக்கு
('ரத்தியருள் வித்தகமார் முதல்வா பராக்கு
முக்கட்பூ தேஸ்வரரே முனைவர் பராக்கு

## இலாலி

கொட்டுடுக் கைக்கரத் தாதீயி லாலி
கொற்றமுற் றுப்பரத் தானாயி லாலி
துட்டரைச் செற்றமுச் சூலாலி லாலி
சொர்க்கமுத் திப்பதக் கோவேயி லாலி
இட்டமுற் றுப்பரத் தாடீயி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சகத் துக்கருட் டேவேயி லாலி
அட்டதிக் குப்புகழ்ப் பூதாலி லாலி
அற்புதத் தற்பரச் சோதீயி லாலி

## மங்கலம்

செங்கனக வண்ணருக்கு மங்கலம்
செங்கண்விடைப் பாகருக்கு மங்கலம்
நங்கவுரி மணாளருக்கு மங்கலம்
நாதவிந்து நாயகர்க்கு மங்கலம்
துங்கமிகுள் தாணுவுக்கு மங்கலம்
சொக்கலிங்க சோதியார்க்கு மங்கலம்
பொங்குமறைப் புண்ணியர்க்கு மங்கலம்
பொற்புறுபூ தேஸ்வரார்க்கு மங்கலம



# ஆனந்தம்

அப்போது நான் பாடசாலை மாணவன் கனகசிங்கம் வாத்தியார் வீடு என்றால் எப்போதும் களைகட்டும் அந்தவீடு வந்தோரை வரவேற்று உபசரிக்கும் இல்லமாக விளங்கியது. அன்னாரது பிள்ளைகள் சம வயது உடையவராக இருந்ததாலும் எனது தாய் தந்தையருடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததாலும் நாம் அங்கு செல்வோம். மூத்தவர் சதானந்தம் அண்ணர் எங்களை அழைப்பார். இளையவர் சிவஞானம் எமது நண்பன் இந்த நட்பும் உரிமையும் எம் இரு குடும்பங்களிடையேயம் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தியது அப்போது பூதவராயர் கோயில் திருவிழா என்றால் என்ன கொட்டிருளிப்பான் பிள்ளையார் திருவிழா என்றால் என்ன எமது பொழுது சதானந்தம் அண்ணர் வீட்டுடன் செலவழிந்தது நாம் செலவிட்ட அந்த நாட்கள் இன்றும் மெய் சிலிர்க்கிறது. நாட்கள் உருண்டோடின பல புலம்பெயர்வுகள் இடப் பெயர்வுகளென காலம் உருண்டோடியது.

மீண்டும் பூதவராயர் ஆலயதீர்த்தத் திருவிழா எங்களிடையே மீண்டும் அந்த இணைப்பைக் கொண்டுவந்தது. அதே ‘தம்பி’ என்ற வார்த்தை புன்சிரிப்பு பணிவு பொறுமை அணைக்கும் பாங்கு ஊர் குடிபெயர்த்து பாதுகாப்புத் தேடி எங்கெங்கோ ஓடிய வேளையிலும் மலையென எதிர்த்து வந்த துயரங்களையெல்லாம் பனியென ஓடச் செய்து சிவத்தொண்டினை காலை மாலையெனப் பாராது நிறைவேற்றி வந்தமை காலத்தால் போற்ற வேண்டியது.

அவர் செய்த சிவன் சேவையை அவர் தம் பிள்ளைகள் குடும்பத்தின் தூண்களாக இருந்து வாழையடி வாழையாக குடும்பத்தின் பெருமையினை காக்கவைக்கிறது. அவரது வாகனமான அந்த சைக்கிள் வண்டிக்கு தெரிந்த பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலும் வீடும் என்பார்கள் ஆனந்தம் என்றால் பூதவராயர் கோயில் பூதவராயர் கோயில் என்றால் ஆனந்தமென மற்றோர் சொல்லுமளவிற்கு சிவன் சேவையால் தன்னை உயர்த்தியவர் திருவெம்பா தினங்களில் அந்தவயதிலும் பனி, மழையெனப் பாராது அதிகாலை துயில் எழுந்து திருவெம்பாவை பாடி அர்ச்சகரும் மற்றோரும் போற்றியமை மறக்கமுடியாததொன்று கோயிலின் கட்டிட வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டுகள் காலத்தால் மறக்க முடியாதவை.

அமரர் அவர்களை நான் இறுதியாகக் கண்டது விபத்துக்குள்ளாகி படுக்கையில் படுத்திருந்த வேளை அந்த வேளையில் கூட அவர் சொரிந்த இனிமையான சொற்கள் இன்னும் என் மனத்திரையில் ஆடுகிறது குடும்பதலைவனாக இருந்து சிறப்புடன் செயற்பட்ட போதும் சகோதரபாசத்தை அவர் என்றும் கைவிட்டதில்லை. எதிர்பாராத ஆண்டவன் அழைப்பு எம் எல்லோர் கண்களையும் குளமாக்கியது காணா தெய்வத்தின் அருளாலே வந்த கண்கண்ட தெய்வம் த்ரன்றோ என பிள்ளைகள் மனைவி சகோதரங்களை கண்கலங்கவைத்து இறைவனடி சேர்ந்து விட்டார் பூதவராயருக்கும் அம்மனுக்கும் அவர் ஈந்த சேவைக்கு அவர்தம் கிளைகள் சாந்தி பெறும் வேண்டுவார் வேண்டுவது ஈயும் பரமசிவன் நன்மை செய்வான் நீங்கள் வணங்கிய அம்மன் கைவிடமாட்டாள். பிள்ளைகள் தங்கள் சேவையினை தொடர்வார்கள் விண்ணுலகிலிருந்து அதை பார்த்து மகிழுங்கள்.

வே.சிவசிதம்பரம்
அதிபர்
விக்கினேஸ்வராகல்லூரி
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்திருக்க வேண்டியவை

**01. தெரிந்து கொள்ளவேண்டிய பிரியர்கள்.**

| | |
|---|---|
| சாமகானபிரியன் | - சிவன் |
| அலங்காரப் பிரியன் | - விஷ்ணு |
| நமஸ்காரப் பிரியன் | - சூரியன் |
| அபிஷேகப்பிரியன் | - சிவன் |
| போசகப்பிரியன் | - பிள்ளையார் |
| பாலகப்பிரியன் | - பிள்ளையார் |

**02. கோயில் தீபங்களின் நன்மைகள்**

| | |
|---|---|
| தூபம் | - உற்சாகத்தை தரும் |
| ஏகதீபம் | - விழிப்பைத் தரும் |
| சூலதீபம் | - வயிற்றுவலி நீங்கும் |
| கஜதீபம் | - ஐஸ்வரியத்தைக் கொடுக்கும் |
| சிம்மதீபம் | - ஆயுளைக் கொடுக்கும் |
| வியாக்கிரதீபம் | - விலங்குகளின் இருந்து பயம் போகும். |
| மயூராதீபம் | - புத்திப் பேற்றைத் தரும் |
| மேருதீபம் | - எல்லா நாட்டிலும் செல்வாக்குதரும். |

**03. நந்தியின் சிறப்புத்தலங்கள்**

| | |
|---|---|
| நந்தி சங்கம தலம் | - கூடலையற்றூர் |
| நந்தி விலகிய தலம் | - திருப்புண்கூர் |
| நந்தி கொம்பொடித்த தலம் | - திருவெண்பாக்கம் |
| நந்தி நின்ற திருத்தலம் | - திருமாற்பேறு |
| நந்தி திருமணம் நடக்கும் தலம் | - திருமழபாடி. |

**04. கோயிலில் வலம் வருதலின் நன்மைகள்**

| | |
|---|---|
| காலையில் வலம்வந்தால் | - நோய்நிங்கும் |
| பகலில் வலம் வந்தால் | - விருப்பம் அளிக்கும் |
| மாலையில் வலம் வந்தால் | - எல்லாப்பாவமும் அகலும் |
| அர்த்தசாமத்தில் வலம் வந்தால் | - மோட்சசித்தி உண்டாகும். |

**05. ஆலயத்தில் வழிபாடு செலுத்தும் ஒழுங்குமுறை**

1) கோபுரம்
2) துவாரபாலகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பலிபீடம்
4) நந்தி
5) பிள்ளையார்
6) மூலமூர்த்தி
7) பரிவாரமூர்த்தி
8) சண்டேஸ்வரர்

**06. பெண்ணின் ஏழுபருவம்**

1) பேதை 2) பெதும்பை 3) மங்கை
4) மடந்தை 5) அரிவை 6) தெரிவை
7) பேரினப் பெண்

**07. நாளும் அதற்குரிய தெய்வங்களும்**

திங்கள் - சிவபெருமான்
செவ்வாய் - அம்பாள்
புதன் - விஷ்ணு
வியாழன் - விநாயகர்
வெள்ளி - முருகன்
சனி - சனியன்
ஞாயிறு - சூரியன்.

**08. நூல்களும் அதன் ஆசிரியர்களும்**

சீறாப்புராணம் - உமறுப்புலவர்
தேம்பாவனி - வீரமாமுனிவர்
மகாவம்சம் - மகாநாம
காஞ்சிபுராணம் - சிவஞான முனிவர்
நன்னூல் - பவனந்திமுனிவர்
நளவெண்பா - புகழேந்தி
கீதாஞ்சலி - இரவீந்திரநாத்தாகூர்
மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்
இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார்
சகுந்தலை வெண்பா - சுநடேசபிள்ளை

**09. கால நிலையும் விழாக்களும்.**

ஒருவருடம் - காசிதவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இருவருடம் | - பருத்திவிழா |
| மூன்றுவருடம் | - தோல்விழா |
| நாற்குவருடம் | - பூ விழா பழவிழா |
| ஐந்துவருடம் | - மரவிழா |
| ஆறுவருடம் | - கற்கண்டுவிழா, இரும்புவிழா |
| ஏழுவருடம் | - கம்பளிவிழா செம்புவிழா |
| எட்டுவருடம் | - வெண்கலவிழா |
| ஒன்பதுவருடம் | - மண்கலசவிழா |
| பத்துவருடம் | - தசரவிழா, அலுமனியவிழா |
| பதினொருவருடம் | - எ.ஃ.குவிழா |
| பன்னிரண்டு வருடம் | - வின்னவிழா |
| பதின்மூன்றுவருடம் | - பின்னவிழா |
| பதினான்குவருடம் | - தந்தவிழா |
| பதினைந்து வருடம் | - ஸ்படிகவிழா |
| இருபத்திஜந்துவருடம் | - வெள்ளிவிழா |
| ஐம்பதுவருடம் | - பொன்விழா |
| அறுபதுவருடம் | - மணிவிழா, வைரவிழா |
| எழுபத்ஐந்துவருடம் | - பவளவிழா |
| நூறுவருடம் | - நூற்றாண்டுவிழா |

**10. எட்டுத்திக்கும் உரிய தெய்வங்கள்**

| | |
|---|---|
| கிழக்கு | - இந்திரன் |
| தென்கிழக்கு | - அக்கினி |
| தெற்கு | - இயமன் |
| தென்மேற்கு | - நிருதி |
| மேற்கு | - வருணன் |
| வடமேற்கு | - வாயு |
| வடக்கு | - குபேரன் |
| வடகிழக்கு | - ஈசானன். |

**தொகுத்தவர்**

**சைவப்புலவர் சித்தாந்தாந்த பண்டிதர்.**

**கிழ்கரவை நவம் (ஆயு)**

**ஆசிரிய ஆலோசகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரியலின் அதிசய உண்மைகள்

## ஆதாம் ஏவாள் பற்றிய உண்மை.

DNA யை வைத்து பல விடயங்களை கண்டுபிடிக்கலாம் என்பது உயிரியலாளர்களின் தற்போதைய ஆய்வுகளின் முடிவாகும். DND இன்மூலம் நமக்கும் நம் மூதாதையர்களுக்கும் இருக்கும் இணைப்பை நமக்கு பொதுவாக இருக்கும் DNA யைக் கொண்டு அறியலாம். பாலுறவானது ஒவ்வொருவரது Gene அமைப்பும் தனிப்பட்டதாக அமையும் பொருட்டு நம் பெற்றோரின் Gene களை கலக்கி தாயின் Gene இருந்தும் தந்தையின் Gene இருந்தும் சிலவற்றை உதறி சிலவற்றை எடுத்துக் கொண்டு கலக்கி விடுகின்றது. நம்மிடம் நம் தாயிடமிருந்து கால்பங்கு தான் நமக்கு வருகிறது. ஒவ்வொரு தலைமுறைக்கும் இந்த பங்கு குறைந்து கொண்டே போகிறது.

இழைமணி என்பது எமது கலங்களுக்கு சக்தியைத் தரும் புன்னங்கம் ஆகும். இதற் கென்று தனியே ஒரு DNA இருக்கிறது. உங்களிடம் இருக்கும். எல்லா இழைமணி DNA உம் தாயிடமிருந்தே (உங்களது பாட்டியிடமிருந்து) பெறுகிறாள் இது உடையாத சங்கிலியாக மூத்த மூதாதையர் வரைக்கும் செல்கிறது. இழைமணி DNA உம் பரம்பரைபரம்பரையாக மாறாமலேயே வருவதில்லை. எப்போதாவது ஒருமுறை இழைமணி DNA ஐ பிரதி எடுக்கும் போது ஒரு எழுத்து விட்டுப்போய் விடுகிறது. இந்தத்தவறுகள் ஒருநிலையான வேகத்தில் நம்மூதாதையர்களின் தலைமுறையிலிருந்து இருக்கின்றன. இது ஒருவகை மூலக்கூறு கடிகாரம்போல அறிவியலாளர்களுக்கு உதவுகின்றது. இவ்வாறு பிரதி எடுக்கும் தவறுகளை வைத்து (Mutatians) இரண்டு நபர்கள் எவ்வளவு காலத்துக்கு முன்னால் ஒரே மூதாதையர் தாயைப் பெற்றிருப்பார் என்று கணக்கிடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980இல் அலன் வில்சன் என்ற ஒரு அறிவியலாளர் இது போன்றதொரு ஒப்புமை வேலையை உலகம் முழுவதிலும் இருந்து 135 பெண்களிடம் இருக்கும் இழைமணி DNA ஐ எடுத்து அவர்களின் ஒவ்வொருவரிட மிருந்து இன்னொருவர் எவ்வளவு தூரம் வம்வாவழியில் இருக்கிறார் என்பதை கணக்கிட்டார். அதேபோல எல்லாப் பெண்களுக்கும் ஒரே தாய் இருந்திருந்தால் அவர் எவ்வளவு காலத்துக்கு முன்னால் இருந்திருப்பார் என்பதைக் கணக்கிட்டார். தாய்வழி முறையில் நாம் எல்லோரும் ஒரு பொதுவான தாயை சுமார் 150,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெண்ணிடம் பார்க்கின்றோம் இன்னொரு வழியில் சொல்லப்போனால் ஒரு மனிதருடைய 10,000 ஆவாது முப்பாட்டி, நம் எல்லோருக்கும் 10,000 ஆவது முப்பாட்டி இதனை வளை இழைமணி ஏவாள் என்று அறிவியலாளர்கள் அழைக்கின்றனர். நம்மிடம் ஏராளமான பொதுவான தாய்மார்கள் இருந்தார்கள் அவர்களது Geneகள் நிச்சயம் நம்மிடையே இருக்கின்றன. அவை நம் தந்தையர் வழியில் குழப்படி செய்யப்பட்டு நம்மிடம் வந்திருக்கின்றன இழைமணி போலவே நம் தந்தையர் வழியை அறிய Y Chromosame உதவலாம். இக்குரோமோ சோம் (Chromoszme) தந்தைமூலமாக தந்தை மூலமாக மகனுக்கு வருகிறது ஆண்கள் XY பெண்கள் XX எனும் Chromosame களை கொண்டுள்ளனர் அண்மையில் Y Chromosame பிரதி எடுக்கப்படும் போது நிகழும் DNA எழுதுக்கள் தவறுகளைப்பற்றி ஆய்வு செய்ய உலகம் முழுவதிலிருந்தும் சுமார் 1062 ஆண்களது Y Chromosame களை எடுத்து ஒப்பிட்டார்கள் நம் எல்லோருக்கும் பொதுவான மூத்த தாத்தா சுமார் 60,000 வருடங்களுக்கும் முன்னால் இருந்தார் என்பதை அறிந்தார்கள் இவரை Y Chramasame ஆதாம் என்று அழைக்கிறார்கள் இவர்கள் சுமார் 85,000 வருடங்கள் இடைவெளி விட்டு வாழ்ந்தவர்கள். நமது மரபணு Gene தொகுப்பில் இருக்கும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே ஒரு பரிணாம வரலாறு இருக்கிறது எனவே நமக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆதாம்களும் ஒன்றுக்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவாள்களும் இருக்கிறார்கள். அது நிங்கள் நமது DNA இல் இருக்கும் எந்தப்பகுதியைப் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது ஆகும்.

## டொல்பின்

பரந்த ஆழ்கடலில் வாழ்ந்து வருவதுடன் மனிதனுடன் நட்புறவுடனான ஒரு விலங்காக விளங்குகின்றது ஆதியில் நிலத்தில் இருந்து கடலுக்குள் பிரவேசித்த டொல்பின் இன்று கடல் வாழ் ஜீவராசியாக மிகச்சிறப்பான முறையில் இனயபாக்கம் அடைந்துள்ளது. டொல்பின் இல்லாத சமுத்திரம் இல்லை என்று சொல்லலாம். மிகவும் குளிரான வடசமுத்திர வலயத்தையும் (ஆக்டிக்) தெற்கு (அன்டார்டிக்) சமுத்திர வலயத்தையும் தவிர மற்றைய எல்லா சமுத்திரங்களிலும் இவை வாழ்கின்றன. சிடேசியா வருணம் டெல்பினிடே குடும்பத்தை சார்ந்தது. 17வகையான சாதிகளும் 32 வகையான இனங்களும் அடங்கும்.

மணிக்கு 60 70Km வேகத்தில் நீந்துவதற்கு ஏற்ற உடல் தோற்றத்தை உடைய டொல்பின் சாதாரணமாக 2m நீளமும் (7.12mவரை வேறுபடலாம்) 50 - 70Kப நிறையும் (40Kg - 4.5 தொன்வரை வேறுபடலாம்) உடையது. சாதாரணமாக டொல்பின் ஒன்றுக்கு கடலில் 20m ஆழம் வரை மூழ்கிச் செல்ல முடியும். ஒன்றுக் கொன்று வித்தியாசமான 100 - 200 வரையிலுள்ள பற்கள் அதன் வாயில் வரிசையாக காணப்படுவது சிறப்பியல்பாகும் மாறா உடல் வெப்பநிலையுடையது (36 - 370C) தோலின் கீழ் உள்ள கொழுப்புப்படை கடலில் வெப்பத்தைப் பேண உதவும். மனிதர்களைப் போன்று தாயின் கர்ப்பப்பையில் இருந்து பிறந்து தாய்ப்பாலில் வளர்கின்ற டொல்பின். தாயின் கர்ப்பப்பையில் வளர்கின்ற காலம் 10 - 12 மாதங்கள் ஒரு தடவையில் ஒரு குட்டியையே ஈனும் பிரசவகாலம் 2 மணித்தியாலங்கள் குட்டி ஈனும் போது முதலில் வாலும் இறுதியில் தலையும் வெளிவரும் குட்டி பாலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ச்சியடைய ஈனமுடியும் சுமார் 50 வருடங்கள் அல்லது அதற்கு மேல் வாழக்கூடியது. பல்வேறுபட்ட ஒலிகளை ஏற்படுத்தவல்லவை எனினும் குரல்நாண்கள் இல்லை. நத்தைகள் மீன்கள் உட்பட ஏனைய கடல்வாழ் உயிரினங்கள் சாதாரண உணவாகும். இதன் நிறம் ஆகாயத்தினதும் நிலத்தினதும் வர்ணங்களின் கலவையாகும். இது எதிரிகளில் இருந்து தம்மைப் பாதுகாக்க உதவுகின்றது கடல்வாழ் உயிரினங்களில் புத்தி சாதுரியத்தனமும் சமூகரீதியில் பழகக் கூடியதுமான விலங்கு டொல்பினாகும். அது மனிதர்களுடன் பழகுவதில் அதிக பிரியமுள்ளது. கடலில் மீன்பிடிக்கச் செல்கின்ற மீனவர்களாலும் கப்பல் ஓட்டுனர்களாலும் கிட்டிய நண்பனாக டொல்கின் கருதப்படுகின்றது.

**தொகுப்பு**
**S.நித்தியானந்தன்**
**(உயிரியல் ஆசிரியர்)**
**வவுனியா விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Windows (விண்டோஸ்) இன் வளர்ச்சி

Microsoft (மைக்கிரோசொவ்ட்) நிறுவனம் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி முதல் விண்டோஸ் பதிப்பான "Windows 1.0" இனைவெளியிட்டது. இரண்டாவது பதிப்பான "Windows 2.0" இனை 1987இலும் மூன்றாம்பதிப்பான "Windows 3.0" இனை 1990 இலும் வெளியாட்டு கணனி உலகில் தனக்கொன ஏடுமுகத்திரை பதித்தது. இவ் windows களுக்கு கிடைத்த அமோக வரவேற்பைத் தொடர்ந்து 1992 ஏப்பிரல் 6இல் "Windows 3.1" இனை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து Networ போன்றவற்றிற்கும் ஏற்றதாக பல்வேறு Windows களை அறிமுகம் செய்தது அவற்றின் வரிசையிலே சிறப்பானதாக 1998 இப் "Windows 98" பயன்பாட்டில் உள்ளது. அதன் பின் தற்போது அநேகமானோர் பயன்படுத்தும் Windows XP போன்றன வெளியிடப்பட்டது. தற்போது 2007 ஜனவரியில் வெளியிடப்பட்ட அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட இந்த Versin தற்போது பல்வேறு சர்ச்சைக்கு உட்பட்டுள்ளது. இது தொடர்பாக பில்கோட்ஸ் பல்வேறு பதில்களைத் தெரிவித்தாலும் "Windows Vista" சர்சையால் இருந்து இன்னும் மீளவால்லை.

## உங்கள் கணனிகளை பாதுகாக்க சில ஆலோசனைகள்

1) Mouse இன் அடிப்பகுதியில் அழுக்கச் சேராது பார்த்துக் கொள்ளுங்கள்
2) Key board இல் நீரோ, தூசித் துணிக்கைகளோ போகாது பார்த்துக் கொள்ளுங்கள்.
3) கணனியை சுவரில் இருந்து ஒரு அடி தூரத்தில் வைத்து பயன்படுத்துங்கள்
4) Scanner மேல் பாரமான பொருட்களை வைக்காதீர்கள்
5) சூரிய ஒளி படும்படியாக கணனியையோ அதன் பொருட்களையோ வைக்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) கணனி சூடாக உள்ளபோது அதனை மூடாதீர்கள்
7) Monitor இற்குமேலோ CPU விற்கு மேலே ஃபிளெப்பி டிஸ்க் போன்றவற்றை வைப்பதை தவிருங்கள்
8) Air Cooler களை கணனி இருக்கும் இடங்களில் பயன்படுத்துவதை தவிருங்கள்.
9) Start UP இலுள்ள தேவையற்ற புரோகிராம்களை நீக்கிவிடுங்கள்
10) Floopy Disk,CD என்பவற்றை பயன்படுத்த முன் அதில் Virus இருக்கிறதா என பரிசோதியுங்கள்
11) கணனி கேடாள்களை உதாரணமாக VGA Cableகளை பயன்படுத்தும் போது அவதானமாக பயன்படுத்துங்கள்.
12) கணனியை முறைப்படி Shut down செய்யுங்கள் உங்களுடை கணனிகளுக்கு UPS பயன்படுத்துங்கள்.
13) குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருதடவை Disk Clean Up Disk Defragment Scan Disk என்பன மேற் கொள்ளுங்கள்.
14) Recycle bin, Temporary Folder போன்றனவற்றை சுத்தம் செய்யுங்கள். இணையம் பயன்படுத்துபவராக இருந்தால் Cache Folder இனை அவ்வப்போது Clean செய்யுங்கள்
15) Power Management இனை பயன்படுத்தி குறிப்பிட்ட நேரம் கணணி பயன்படுத்தாது இருந்தால் Stand by யிற்கு செல்லக் கூடியவாறு Set செய்யுங்கள்.

**பேரன்**
**நி. அரவிந்தன்.**
N.M.M.V
Grade - **11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.சதானந்தம் அவர்கட்கு ஸ்ரீ பூதேஸ்வர சிவாலய பரிபாலனசபையினரதும் அடியார்களினதும் கண்ணீர் காணிக்கை

"தவஞ்செய்வார் எல்லாம் தம் கருமம் செய்வார்
மற்றெல்லாம் ஆசையுட்பட்டு

என்பதற்கிசைய வாழ்ந்தவர் திரு.கனகசிங்கம் சதானந்தம் அவர்கள்.

அவர் வாழ்ந்த நாளெல்லாம் சிவத்தொண்டே பூச்சாக கொண்டவர். திரு சதானந்தம் அவர்கள் துன்னாலை தெற்கிற்கில் அமைந்துள்ள பூதேஸ்வரர் சிவாலயத்தின் ஆதின தர்மகர்த்தாவாக தந்தைக்குபின் தனது கடைசி மூச்சுவரை உளைத்தவர்.

இவரது காலத்தில் எத்தனையோ இடையூறுகள், பயமுறுத்தல்கள் அனைத்திற்கும் மத்தியிலும் மனம் தளராது உடல் சளைக்காது தன் விடா முயற்ச்சியினால் நம் பூதேஸடவரரின் கடமைகள் தவறாது நடைபெற அவர் பட்ட கஸ்டங்கள், வேதனைகள், யாவற்றையும் எழுத்தில் வர்ணிக்கவே முடியாது. அந்தளவில் ஆலய திருப்பணிகள் அனைத்தையும் வழி நடத்தி சென்ற சிறந்த கடமையுணர்வு உள்ளவர்.

அவர் பிரிவு நம் எல்லோருக்கும் தாங்கமுடியாத அதிர்ச்சியும் வேதனையுமாகும்.

நம் கோயிலுக்காக தனி மனிதனாக நின்று போராடி கோயில் கடமைகளை சிறப்புற நடத்தி முடித்த அந்த உன்னதமான பெரும் மனிதரின் உயிர் சிவபெருமானின் திருப்பாதங்களில் சென்றடைய வேண்டுமென இறைவனை வேண்டி அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் அடியார்களின் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

"கடமை முடிந்தது விதி வென்றது'

**இங்ஙனம்**
**தலைவர்**
**பரிபாலன சபையினர்**
**அடியார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணிகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நீங்கள் சிகிச்சை செய்து பரிகாரம் காணக்கூடிய சில இலகுவான வைத்திய முறைகள்.

**இருமல்சளி நீங்க**

சித்திரத்தை, தாக்கு, திப்பலி, மிளகு, பேரீச்சம்பழம், அதிமதுரம் இவற்றை இடித்துப் பொடி செய்து 30 மில்லிலீற்றர் பாலிலும் 30மில்லிலீற்றர் நீரிலும் கலந்து அதை 1/4 பங்காக வற்றச்செய்து அந்தக்குடிநீரில் 10கிராம் கற்கண்டு தூளாக்கிக் கலந்து காலை, மாலை 1அவுன்ஸ் வீதம் குடித்து வரவும் அல்லது.

திப்பலி 50கிராம், இந்து உப்பு 50கிராம் எடுத்துத்தூளாக்கி வைத்துக்கொண்டு 1/2 தேக்கரண்டி வீதம் காலை மாலை சாப்பாட்டிற்கு முன் தேன் அல்லது கற்கண்டு கலந்து சாப்பிடவும்.

**பல்லீறு வீக்கம் நீங்க**

கடுக்காய்த்தோல், .திறன்றிக்காய்த்தோல், நெல்லி, இவற்றை எடுத்து 1போத்தல் நீர் விட்டு அதை 1/2 போத்திலாகவற்றச்செய்து அந்த நீரால் வாய் கொப்பளித்து வரவும்.

* இக் குடிநீரால் புண்களையும் கழுவலாம்

**வாய்ப்புண் நிங்க**

படிகிராம் $3^1/_2$கிராம் எடுத்து $1^1/_4$ போத்தல் தண்ணீரில் கரைத்து வடிகட்டி வைத்துக் கொண்டு வாய் கொப்பளித்து வரலாம்.

* ஆலம்பட்டையை 1போத்தல் தண்ணீரில் அவித்து அதை1/2 போத்தலாக வற்றச்செய்து அதில் வாய் கொப்பளித்தால் பலன்கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவலி நீங்க**

* தாக்கு இலவங்கம்பட்டை, மிளகு, இவற்றை சடஅளவு எடுத்து வெந்நீரில் அரைத்து நெற்றியில் பற்று இடவும்
அல்லது
* இஞ்சியை பசுப்பால் விட்டு அரைத்துச் சூடாக்கி நெற்றியில் பூசவும்

**மூல ரோகம் நீங்க**

* வெள்ளை வெண்கரியம் 50 கிராம் எடுத்து நெய்யில் வதக்கி காலையும் மாலையும் சாப்பிட்டு வரவும்.
அல்லது
* வட்டகத்தி இலையை வேகவைத்து அதைக்கடைந்து அதை ஆசனத்தில் கட்டிவரவும்.

**குடற்புழுக்கள் அகல**

* கருஞ்சீரகம், ஓமம், பலாவித்து என்பவற்றை தூளாக்கி வைத்துக்கொண்டு இரவில் 3விரல் தூள் சீனியுடன் கொடுத்து மறுநாட்காலை 1மேசைக் கரண்டி ஆமணக்கென்றை கொடுக்கவும்.

**விரல் காற்று நீங்க (நகச்சுற்று)**

* எலும்பிச்சம் பழத்தைத் துளைத்து அதில் நகச்சுற்று ஏற்பட்ட விரலை சொருகி வைத்திருக்கவும்.
* ஆளிவித்தை அரிசிமாவில் குழைத்துப் பற்றுப்போடவும்.

**சொறி, சிரங்கு நீங்க**

* வெண்காரப்பச்சையை தேங்காயெண்ணையில் போட்டு காய்ச்சிப் பூசவும்
* ஆடுதின்னாப்பாலைச்சாற்றை வேப்பெண்ணையுடன் கலந்து சூடாக்கிப் பூசவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீச்சுட்ட புண், வெந்நீர்பட்ட இடங்களுக்குப்பரிகாரம்**

* சுண்ணாம்பு கரைத்த தெளிநீரை தேங்காயெண்ணையில் கலந்து பூசவும்.
* வாழை மட்டையை இடித்துச் சாறு எடுத்துப் பூசவும் அதன் சிக்கையை பாதிக்கப்பட்ட இடத்தில் வைத்தக்கட்டவும்.
* கோழி முட்டை வெண்கருவை பூசிவரவும்
* தேங்காய்ப்பூவை பாதிக்கப்பட்ட இடத்தில் வைத்துக் கட்டவும்.

**தேகத்தடிப்புக்கு (அலர்ஜிக்கு) நிவாரணம்**

* மிளகு 5ஐ வாயிலிட்டு சப்பி 3நாட்களுக்கு காலையும் மாலையும் வெந்நீர் குடிக்கவும்

**காதுவலிக்கும் சீழ்வடித்தலுக்கும் நிவர்த்தம்**

* வெள்ளைப் பூடு இரசம் காலை, மாலை 1தூளிவிடவும்
* மருள்பட்டையை வாட்டிப்பிழிந்து காலை,மாலை 1துளிவிடவும்

**கண்நோய் அகல**

* சோற்றை வெண்ணையுடன் கலந்து பொட்டளிகட்டி மெல்லிய சூட்டில் ஒத்தடம் கொடுக்கலாம்.
* படிகிராம் 200கிராம் எடுத்து 50 மில்லி லீற்றர் பன்னீரில் கலந்து போத்தலில் வைத்துக்கொண்டு காலை மாலை 1 தூளி விடலாம்.
* ஒரு சாதிக்காயை பசுப்பாலில் அரைத்து இரவு படுக்கும் பொழுது கண்ணைச்சுற்றி வளையம் போட்டுவிட்டு காலையில் கழுவிவிடலாம்.

**ஆணி குற்றினால் பரிகாரம்**

* சுண்ணாம்பைப் பூசவும்
* சாதாரண கறி உப்புக்கல்லை ஆணி குற்றிய இடத்தில் வைத்துக் கொள்ளியால் தடவவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆழமாகக் குத்தி கிறள் உள்ளிருந்து வேதனைப்படுத்தினால் அந்த இடத்தில் பசுவின் சாணத்தினால் புறவளம் போட்டு சேங் கொட்டையைச் சுட்டு வேப்பெண்ணையில் காய்ச்சி காயம் ஏற்பட்ட இடத்தில் 2துளி விடவும்.

**முள்ளு, ஈக்கு, சிராம்பு குத்தி உள்ளே முறிந்து விட்டால் பரிகாரம்.**

* வெள்ளைப் பூண்டை தேங்காய்ப்பாலில் அவித்து காயத்தின் மீது வைத்துக்கட்டலாம்.
* சிறிது எள்ளை வாயிலிட்டு சப்பி எடுத்து அந்த இடத்தில் வைத்துக்கட்டினால் 1/2 நாளில் உள்ளிருக்கும் பொருள் வெளியில்வரும்.
* கண்ணாடி, பீங்கான் குத்தினால் வேர்க்கொம்புடன் சீனி கலந்து வைத்துக்கட்டவும்.

**வெட்டுக்காயம் ஏற்பட்டால் பரிகாரம்**

* வாழைப்பூவை உடைத்து அதிலிருந்து வரும் நீரை காயத்தின் மீது தடிப்பாகப் பூசிவிடவும் சிறிது நேரத்தில் அவ்விடம் தடித்து காயத்தை இறுக்கமாக பற்றிக் கொள்ளும் புண்மாற பூச்சுவிழும்.
* காயத்தின் மீது பலாக்காய்ப்பாலை தடவிவரவும் அதன்மேல் நல்லெண்ணை தடவவும்.

**நோவுக்குப்பரிகாரம்**

* விராலி இலையையும் காண்டஇலையையும் சமனாக எடுத்து அரைத்து நோவுள்ள இடத்தில் பூசவும்.

**இரத்தக்கண்டல் சுகமடைய பரிகாரம்**

* சுண்ணாம்பை தேனுடன் கலந்து அவ்விடத்தில் பூசிவரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுகள் அமருவதற்கு**

* சதைகரைச்சான் இலையில் ஆமணக்கெண்ணை தடவி அதை நெருப்பில் வாட்டி பருவில் போட பலன்கிடைக்கும்.
* பெருங்காயத்தை நீரில் உரைத்து கட்டிகள் மீது பூசிவர பலன்கிடைக்கும்
* கரிய பவளத்தை கோழிமுட்டையின் வெள்ளைக் கருவில் கரைத்து வீக்கத்தின் மீது பூச பலன் கிட்டும்.
* மஞ்சள் சுட்ட சாம்பலை ஊமத்தை இலைச்சாற்றில் குழைத்துப் பூசிவர பலன் கிடைக்கும்

**மலக்கட்டை நீக்கப்பரிகாறம்**

* கடுக்காய்த்தோல் 15கிராம் எழுத்து 1/2 பேர்த்தல் நீர் விட்டு 1/4 பங்காக வற்றச்செய்து 1மேசைக்கரண்டி குடிநிரில் 1துளி தேசிப்புளிச்சாறு விட்டுக்குடிக்கவும்.

**வயிற்று வலிக்குப் பரிகாறம்**

* மிளகு 5கிராமும் சீரகம் 5கிராமும் எடுத்து 1/2போத்தல் நீர் விட்டு அதை அரைவாசியாக்கி காலையில் குடிக்கவும்.

**க. விக்னராஜா**
**அரச ஆயுர்வேதவைத்தியசாலை**
**கரவெட்டி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fax :

Telephone :

(Office)

(Res.)

தியாகராஜா மகேஸ்வரன், பா.உ.

**Thiyagarajah Maheswaran, M.P.**

Member of Parliament, Colombo District.

FORMER MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS



My No. } ..................... Your No. } ..................... Date } .....................

## இரங்கற் செய்தி

அமரர் கனகசிங்கம் சதானந்தம் அவர்களின் பிரிவு அவரின் குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அமரரின் குடும்பத்தோடு 15 வருட காலமாக எனக்கு தொடர்புண்டு. அமரரின் புதல்வன் கிருபைராஜா என்னோடு பல வருடங்களாக சேவை புரிகின்றார் . நான் அறிந்தவரை அவர் ஒரு நேர்மையான அரசசேவையாளர். அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர் அகில இலங்கை சமாதான நீதிவானாக அளப்பரிய சேவைதனை சமூகத்திற்கு ஆற்றியதுடன், துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வர சிவன் ஆலய ஆதீன தர்மகர்த்தாவாக இருந்து அவ்வாலயத்தின் புணர்நீமானப்பணிகள், வருடாந்த உற்சவங்கள் மற்றும் விசேட வைபவங்கள் போன்றவற்றை முன்னின்று நடாத்தியவர். ஓர் ஆலயத்தின் வளர்ச்சிக்கு பொருள் உதவியோ பண உதவியோ உவந்தளிப்பது இலகுவான காரியமாகும். ஆனால் இவற்றினை பெற்று அவ்வாலயத்தினை அனைவரது ஒத்துழைப்புடன் திறம்பட நீர்வாகிப்பது என்பது இலகுவில் முடியாததொன்றாகும் என்பது எனது சொந்தக் கருத்தாகும். இவ்வாறான இம்மாபெரும் தொண்டினை பூதேஸ்வர சிவனுக்கு ஆற்றுவதற்கு அமரர் அவர்களுக்கு கிடைத்தமை அவர் செய்த புண்ணியமேயாகும். அன்னாரின் மறைவு அவர் குடும்பத்தினருக்கு மட்டுமன்றி அந்த பூதேஸ்வர சிவன் தொண்டர்களுக்கும் கூட ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரினது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

தி.மகேஸ்வரன்

**பாராளுமன்ற உறுப்பினர்**

**கொழும்பு மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பூதேஸ்வர கௌரிஅம்பாள் தேவஸ்தானம்
துன்னாலை தெற்கு
கரவெட்டி

யோ.நகராஜசர்மா
வீரபத்திரர் கோவிலடி
துன்னாலை மத்தி
கரவெட்டி.



# கண்ணீர் மல்கும் பிரியாவிடை

## அமரர் திரு.கனகசிங்கம் சதானந்தம்

**ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தரும்**
**ஸ்ரீபூதேஸ்வரர்தேவஸ்தான ஆதின தர்மகத்தாவும்,**
**அகில இலங்கை சமாதானநீதவானும்**

"போற்றின் அரியவை போற்றல்கருத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது"

என் அன்பிற்கும் பண்புக்கும் மதிப்பிற்கும் உரிய எல்லோராலும் ஆனந்தன்ணை என அழைக்கும் திரு.சதானந்தம் அவர்களை எனக்கு 15வருடங்களாக தெரியும். நேர்மையும் திறமையும் கொண்ட ஆனந்தண்னை 40வருடங்களாக ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலய வளர்ச்சியில் அயராது உழைந்தவர். பிறப்பெடுத்த ஆன்மாக்கு நிசமானது மரணம்தான் என மனதைதேற்றி அவர் விட்டு சென்ற பணிகளை தொடர்வோம் அவரின் பிரிவால் துயரும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துகொள்கிறோம்.

இவ்வுலக வாழ்வை நீக்கி அவரின் ஆத்மா சூக்குமநிலை நீக்கி சிவன்பாதம் அடைய பிராத்திக்கிறேன்.

நல்லவர்கள் பூவுலகில் நீண்டகாலம் வாழ்வதில்லை. அவர்களின் மரணமும் எம் மனதில் இருத்து மரணிப்பதில்லை

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பிரம்மஸ்ரீ யோ.நாகராஜசர்மா**
**ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தானம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர் நலம் பேணிய பெருந்தகை

## அமரர் கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்) அவர்கள்

சிரித்த முகம் தவிர்த்து அவர் சினந்து நாம் பார்த்ததில்லை
மரணித்தார் என்ற செய்தி, ஐயகோ! மனம் ஏற்க மறுக்கிறது
நீங்கள் திருமுறை ஓதினால்த் தான் அந்தப் பூதேஸ்வரனும்
திரு உலாக் காட்சி தருவான்
வரம் தரவேண்டிய அந்த இறைவனே உங்களைத் தம்முன்
இணைத்துக் கொண்டார்
உதவியென்று போனோர்க்கு உதவிடும் உத்தமனே
பதவி பல இருந்த போதும் நீங்கள் என்றும் தொண்டனே
சமாதான நீதிவனாய் சமயத்துக் காவலனாய்
தருமகர்த்தாவாய் தருமத்தின் வழி நின்று
விமர்சனத்திற்காளாகிய வியத்தகு பெருந்தகையே
வெலியாத்து ஊழியனாய் வெகுபணிகள் செய்திட்ட
தென் துன்னையூரின் தெய்வத் திருமகன் தான் ஐயா
சதானந்தம் நினதான்மா சதா ஆனந்தம் அடையட்டும்
உங்கள் சொந்தமெலாம் புலம் பெயர்ந்து நன்நிலையில்
சிறந்து வாழ்ந்திருக்க நீங்கள் மட்டும் ஏனோ வாய்ப்பிருந்தும்
வாழ்ந்த ஊர் பெரிது என்று இங்கிருந்தீர்
ஆலயப் பணி பெரிதென்று வாழ்ந்திருந்தீர்
ஊர்ப்பணியென்பது உமது பணியென்றெண்ணி
ஊருடன் வாழ்ந்த தமிழ்மகனே நீர்வாழி
உங்கள் ஆன்மா ஈடேற்றம் பெற இறைஞ்சுகிறோம்.

**"வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

தென்துன்னை ஸ்ரீ பூதேஸ்வார் உம் ஆன்மாவுடன்
சேர்ந்திருப்பாராக உங்களது சிவத்தொண்டும் பொதுத்
தொண்டும் எமையெல்லாம் வழிநடத்தட்டும்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**துன்னாலை தெற்கு மாதர்கிராம
அபிவிருத்திச்சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் நல்ல உள்ளம்

## அமரர் கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்)

மனிதர்களாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் மனிதவாழ்வில் ஏதாவது ஒருவகையில் நல்ல தொண்டுகளைச் செய்தல் வேண்டும். அந்த வகையில் அமரர் கனகசிங்கம் சதானந்தம் துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தான ஆதீன தர்மகத்தாவாக இருந்து சமயத்தொண்டு ஆற்றிய பெருமை மிக்கவர் இக் கோவிலின் சகல நிகழ்வுகளையும் நாள் நேரம் தவறாது செயற்படுத்தி வந்த ஒரு செயல் வீரன்.

இவர் எப்போதும் தூய்மையாகவே இருப்பவர். நெற்றியிலே எந்நேரமும் சந்தனப் பொட்டு இருக்கும் அமைதியான போக்குக் கொண்ட நல்ல உள்ளம். இதன் காரணமாகவே இவரை எல்லோரும் 'ஆனந்தம்' என்று அழைத்து வந்தார்கள்.

ஓய்வு பெற்ற நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தரான இவர் ஓய்வு நேரங்களை பொதுப் பணிகளிலும் சமயத்தொண்டுகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இதன் காரணமாகவே இவருக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டமும் கிடைக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும். சமாதான நீதிவானாக இருந்து துன்னாலை மக்களுக்கு நல்ல சேவையாற்றிய ஒரு நல்ல உள்ளம். இவர் தன்னுடைய சேவைக்காலத்தில் கஷ்டப்பட்ட குடும்பங்கள் பலருக்கு மலசலகூட வசதிகளை அமைப்பதற்கான நிதியினையும் பொருட்களையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குப்பின் பொதுத் தொண்டுகளைச் செய்வதற்கு தனது மகள் செல்வி ச. யோகமலர் அவர்களை ஈடுபடுத்திச் சென்றிருப்பது அவரின் நல்ல உள்ளத்திற்கும் பொதுத் தொண்டிற்கும் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது.

இவரின் மறைவு துன்னாலை தெற்கு மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!
ஓம்சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

**க.பரஞ்சோதி**
**(சமாதானநீதிவான்)**
**கிராம சேவை உத்தியோகத்தர்**
**துன்னாலை தெற்கு.**

## அதிகளவு உற்பத்தியாக்கும் நாடுகள்

| | | |
|---|---|---|
| இரும்பு | - | சோவியத் ரஸ்யா |
| வெள்ளி | - | மலேசியா |
| நாகம் | - | பெல்ஜியம் |
| பொன் | - | தென்னாபிரிக்கா |
| செம்பு | - | ஐக்கிய அமெரிக்கா |
| ஈயம் | - | ஐக்கிய அமெரிக்கா |
| இறப்பர் | - | மலேசியா |
| கோப்பி | - | பிறேசில் |
| கோதுமை | - | ஐக்கிய அமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி பகர்வல்



எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்) அவர்கள் திடீர் மீளாத்துயில் கொண்ட வேளையில் எம்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்து உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைவரை இரு தினங்கள் உடனிருந்தோர்க்கும் இறுதிக்கிரியை முறைகளை ஆற்ற உறுதுணைபுரிந்த உற்றார். உறவினர்கள் நண்பர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் இணைந்து கொண்டோர்க்கும். துண்டுப்பிரசுரங்களை எழுதி அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் தொலைதூரத்தில் இருந்து துயர் பகிர்ந்தோருக்கும் இன்றுவரை எம்முடன் துயர் பகிர்ந்து கொண்டு இருக்கும் நெஞ்சங்களே இன்று அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**ஸ்ரீபூதேஸ்வரர் சிவன் கோவிலடி**
**துன்னாலை தெற்கு**
**கரவெட்டி.**

**இங்ஙனம்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–

அல்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org